அலகு 5

# சந்தையிடுகையின் அடிப்படை கூறுகள்
ELEMENTS OF MARKETING

13
அத்தியாயம்

# சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்
CONCEPT OF MARKET AND MARKETER

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.
–குறள் 677

**பொருள் :**

செயலைச் செய்கின்றவன் செய்ய வேண்டிய முறை, அச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடையக் கருத்தைத் தான் ஏற்றுக் கொள்ளவதாகும்.

## கற்றல் நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்**

- சந்தை மற்றும் சந்தையிடுகையாளரின் பொருள் மற்றும் வரைஇலக்கணம்
- சந்தையின் தேவைகளை தெரிந்து கொள்ளல்
- சந்தையின் வகைகள் பற்றி புரிந்து கொள்ள இயலும்.
- சந்தையிடுகைசெல்வதற்குஎதுவானவைகள் பற்றி அறிந்துகொள்ள இயலும்.
- சந்தையிடுகையாளரின் பங்குகள் மற்றும் பணிகள் பற்றி தெரிந்துகொள்ள இயலும்.

## அத்தியாயம் சுருக்கம்


13.01 சந்தை என்பதன் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

13.02 சந்தையின் தேவைகள்

13.03. சந்தையின் வகைகள்

13.04. சந்தையிடுகையாளர் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

13.05. எந்தெந்த பொருட்களைச் சந்தையிடலாம்

13.06 சந்தையிடுகையாளரின் பங்கு

13.07. சந்தையிடுகையாளரின் பணிகள்


## 13.01 சந்தை என்பதன் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

**சந்தையின் பொருள்**

சந்தை என்ற சொல் "மார்கட்டஸ்" என்ற லத்தீன் சொல்லிருந்து பெறப்பட்டது. மேலும் வணிகம் நடைபெறும் இடத்தை குறிக்கிறது. அதாவது சந்தையின் பொதுவான பயன்பாடானது பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதற்கான ஒரு இடமாக திகழ்கிறது.

**சந்தையின் வரைவிலக்கணம்** (Definition)

சந்தையின் வரையிலக்கணம் பற்றி பல்வேறு அறிஞர்கள் பலவாறு விவரித்துள்ளனர் அவற்றுள் சில முக்கியமானவற்றை கீழ்காணலாம்.

- பைல் என்பவரின் கூற்றுப்படி "சந்தை என்பது வாங்குவோர் மற்றும் விற்போர் ஒருவருக்கொருவர் இணைந்து போட்டியிடும் இடம் அல்லது பகுதியை குறிப்பதாகும்".

- கிளார்க் மற்றும் கிளார்க் ஆகியோரின் கருத்தின் படி "சந்தை" என்பது ஒரு மையப்பகுதி ஆகும். இதில் ஒரு குறிப்பிட்ட பொருளுக்கான உரிமையை மாற்றி வழங்குவதற்கு வழிவகுக்கும் சக்தியாக இயங்குகின்றது.

மேற்கண்ட வரைவிலக்கணங்களை கீழ் கண்டவாறு பொருள் கொள்ளலாம்



12th Commerce Tamil Unit 5.indd 99 19/12/2022 14:46:58